[1973 டிசம்பர் 3

தமிழ்ப்புலவர் தேர்வுக்கு வயது வரம்பு

*572 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தனிப்பட்ட முறையில் தமிழ்ப்புலவர் தேர்வு எழுதுவதற்கு வயது வரம்பைத் தளர்த்தும்படி பல்கலைக் கழகத்துக்கு அரசு யோசனை ஏதேனும் தெரிவித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தனிப்பட்ட முறையில் பி.ஏ., எம்.ஏ., பட்டத் தேர்வுக்கு எழுதுவதுபோல் தமிழ்ப் புலவர் தேர்வுக்கும் இருக்கிற வயது வரம்பு விதிகளைத் தளர்த்துவதுபற்றி இனியாவது அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதைப் பல்கலைக் கழகம்தான் செய்யவேண்டும். ஏற்கனவே முப்பது வயதுக்கு குறைந்தவர்கள் பள்ளியில் சேர்ந்து படித்து, அட்டன்டென்ஸ் கொடுக்காமல் எழுதக் கூடாது என்று இருந்தது. முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் எழுதலாம் என்றிருந்தது. அதைப் பல்கலைக் கழகம் 1969-ம் ஆண்டு 25 வயதாகக் குறைத்திருக்கிறது. இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் யாரும் எழுதலாம். ஆனால் ஆசிரியர்களாக இருந்து மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருந்தால்—அதன் அடிப்படையிலான விதியிருக்கு மானல்—தனி விதிவிலக்கு கோரி அனுமதி பெற்று அவர்கள் எழுதலாம்.

புலவர் சி. பழனிச்சாமி: தமிழ்ப் புலவர் படிப்பை பட்டப் படிப்பாக மாற்றும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது பல்கலைக் கழகத்தின் ஆய்வுக்கு விடப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: மற்றக் கல்லூரிப் பாடங்களுக்கு உள்ளது போல் தமிழ்ப் புலவர் வகுப்பிற்கும் மாலை நேரக் கல்லூரிகள் திறப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?

1973 டிசம்பர் 3]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்ப் புலவர்கள் இப்போது ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். எந்தெந்த அளவிற்கு சில பல கல்லூரிகளில் கட்டுப்படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிற நேரத்தில் மாலை நேரக் கல்லூரி தனியாக வைக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

திரு. வை. பாலசுந்தரம் : நம் தமிழ்நாட்டில் அதிகமான தமிழ்ப் புலவர்கள் எதையாவது எழுதவேண்டுமென்ற துடிப்பில் இருக்கிறார்கள். அவர்களை நம் அரசு எந்த வகையில் பயன்படுத்திக் கொள்ளும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதையாவது எழுதவேண்டுமென்று தோன்றுகிறவர்களை எப்படியாவது பயன் படுத்திக் கொள்ளவேண்டுமென்பது சரிப்பட்டு வராது. தமிழ் படிக்கவேண்டும், தமிழ் ஆர்வத்தோடு தமிழ் மொழி அறிவு பெற வேண்டும் என்றளவில் தமிழில் புலமை பெறுவதில் யாரும் தடையாக நிற்கமுடியாது. அவர்கள் எல்லாம் ஆசிரியர் தொழில் தான் வேண்டுமென்று வரும்போதுதான் அப்படி விண்ணப்பிப் பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. அதில் குறிப்பிட்டார்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

Institute of Catering Technology

* 573 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Catering Institute at Madras has been receiving candidates from Star Tourist Hotels for training; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்நிறுவனம் நட்சத்திரப்பயணிகள் விடுதிகளில் இருந்து வரும் தொழில் பழகும் பயிற்சிச் சட்டம் 1961-ன் கீழ் சிற்றுண்டி விடுதி, செயலிட மேடை மற்றும் உணவு சமைத்தல் கலை, ஆகியவற்றின் ஆறு திங்களுக்கு தொழில் பழகு பயிற்சி அளிக்கின்றது. இத்துடன் விடுதிகளில் வரவேற்றல், மற்றும்